# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.157/மா/2023

நாள். 03.01.2024

திரு.R.மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் (3) மத்தியம்,
மதுரை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 25.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2023 அன்று பெறப்பட்டு, 157/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 25.05.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி மண்டலம் 3க்கு (மத்தியம்) உட்பட்ட அரசரடி, AA ரோடு, கதவு எண். 26ல் இயங்கி வரும் தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை (Devaki Speciality Hospital) அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை ஆறு மாடிகளை கொண்டதாகவும், கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதை நான் நிருபிப்பதற்கு RTI 2005 பிரிவு 6(1)ல் உரிய அலுவலர்களுக்கு கேட்டால் தனி நபர் தகவல் என்றும், அனுமதி, வரைபடம் நகல் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றும் அவை நகர் ஊரமைப்பு துறையிடம் உள்ளது என்றும் சாக்குபோக்கு சொல்லுகிறார்கள். நான் அனுமதியை விட கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று புகார் கூறும்போது உரிய மாநகராட்சி அலுவலர்கள் கள ஆய்வு நடத்தி மறு அளவீடு செய்தால்தானே உண்மை வெளிவரும். நகர் ஊரமைப்பு துறை அனுமதி அளித்துள்ள வரைபடம் அத்துறையில் இருந்தாலும் மாநகராட்சியில் வரைபடம்

கண்டிப்பாக இருந்தால் மட்டுமே சொத்துவரி வசூலிக்கப்படும். அதைவிடுத்து சொத்துவரி முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளது என்று இதற்கு முந்தைய வழக்கு விசாரணையில் கூறியது போல் இந்த தேவகி மருத்துவமனையிலும் கூறக்கூடாது. வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்படவில்லை. சொத்துவரி முழுமையாக அளவீடு செய்து வரி வசூலிக்கப்படவில்லை. மேலும் அங்கு பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் சொத்துவரி வசூலிக்கப்படவில்லை. ஒரு சில நபர்களுக்கு மட்டுமே தொழிலாளர் வசூலிக்கப்படுகிறது.

1. கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
2. உரிய சொத்து வரி மற்றும் தொழிலாளர் வரி வசூலிக்கப்படவில்லை.
3. மருத்துவமனையில் நான்குபுறமும் உரிய இடைவெளி விடவில்லை(set back)
4. வாகன நிறுத்துவதற்கு (parking space) இடம் விடவில்லை.
5. கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்து முன்பகுதியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விதிமுறைகளின்படியும் அரசு சட்டத்திற்கு எதிராகவும் முரணாகவும் கட்டப்பட்டுள்ள தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை (Devaki Speciality Hospital) கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுத்தும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய lock and seal and demolition notice வழங்கியும் மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகத்தாழ்மையுடன் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 02.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 03ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) மதுரை மாநகராட்சி,, மண்டலம 03ன் உதவி ஆணையாளர், தனது 26.06.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.3, வார்டு எண் 58ல் தேனி மெயின் ரோடு அரசரடியில் உள்ள தேவகி ஸ்கேன் மற்றும் மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு நகர ஊரமைப்பு இயக்குனர் அலுவலகத்தால் தொழில் நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், மதுரை மாநகராட்சி வார்டு V, பிளாக் 79 நகரளவு எண்கள் 17,18,20,21, 21/2 மற்றும் 86ல் 3275.50 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவமனை அருகில் செல்லும் அவனியாபுரம் கால்வாயின் குறுக்கே கடந்து செல்வதற்கு மூன்று பாலங்கள் பொதுப்பணித்துறை மூலம் அனுமதி பெறப்பட்டு பாலம் கட்டப்பட்டுள்ளது. கள அலுவலர்களின் குறிப்பின்படி வார்டு 56ல் க.எண்.13 புது ஜெயில் ரோடு க.எண்.14,25A, மற்றும் 25B மற்றும் 26 புது ஜெயில் ரோடு முகவரியில் வரிவிதிப்பு எண்கள் 902779,904498, 902780, 902793,

904470, 902792 சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் வார்டு 58ல் க.எண்.2 டெக்னிகல் ஸ்கூல் மேற்கு 13வது தெரு க.எண். 13 டெக்னிக்கல் ஸ்கூல், மேற்கு 13வது தெரு முகவரியில் உள்ள வரிவிதிப்பு எண்கள் 902357, 903440, 902363 சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மருத்துவமனைக்கு தொழில்வரி 900296 என்ற வரிவிதிப்பு எண்ணிலும், மருத்துவமனை பணியாளர்களுக்கு 900297 என்ற வரிவிதிப்பு எண்ணிலும், மற்றும் பணிபுரியும் செவிலியர்களுக்கு 900298 என்ற எண்ணிலும் ஆக மொத்தம் 50 பணியாளர்களுக்கு தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

6) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)க்கு உட்பட்ட அரசரடி A.A. ரோடு கதவு எண் 26ல் தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை (Devaki Speciality Hospital) இயங்கி வருகிறது. 6 மாடிக்கட்டடம் கொண்ட இம்மருத்துவமனை அனுமதிக்கு மாறாகவும் விதிகளை மீறியும் கூடுதலாக கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட இம்மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கான போதிய வாகன நிறுத்த இட வசதி இல்லை. மேலும் இம்மருத்துவமனையின் முன்பாக உள்ள கிருதுமால்நதியை ஆக்கிரமிப்பு செய்தும் மேற்கண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 111 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 22.06.2017ன்படி நதியிலிருந்து 15 மீட்டர் இடம் விடப்பட்டு கட்டடம் கட்டப்படவில்லை. மேற்கண்ட கட்டடத்தின் நான்குபுறத்திலும் இடம் (set back) விடப்படவில்லை. மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்து வரி முறையாக அளவீடு மாநகராட்சியால் வசூலிக்கப்படவில்லை. மேலும் அம்மருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில்வரியும் மாநகராட்சியில் செலுத்தப்படவில்லை.

மேற்கண்ட தேவகி மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்ட இயக்ககத்தில் முறையாக ஒப்புதல் பெறவில்லை. எனவே, அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும், பார்க்கிங் வசதி இல்லாமலும், கிருதுமால் நதியை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள மேற்கண்ட மருத்துவமனையின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழும், அரசாணை (நிலை) எண் 07 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும் சட்டப்படி நடவடிக்கை எடுத்திடவும், மேற்படி மருத்துவமனையை முழுவதுமாக அளவீடு செய்து சொத்துவரி வசூலித்திடவும், மேலும் அம்மருத்துவமனைப் பணியாளர்களுக்கான

தொழில் வரியை மாநகராட்சியால் வசூலித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7)மதுரை மாநகராட்சி மண்டலம் –03 கண்காணிப்பாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் 18.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:**

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ புகார் எண் 157/மா/2023 வழக்கு தொடர்பாக 18.12.2023 இன்று குற்றாலம் விருந்தினர் மாளிகையில் தேவகி சிறப்பு மருத்துவமனை சம்மந்தமாக ஆணையர் முன்னிலையில் நேரில் ஆஜராகி விளக்கமளித்துள்ளோம். மேலும் உதவி ஆணையரின் 15.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

**8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் –03ன் உதவிப் பொறியாளர், கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் 3ல் (மத்தியம்) உள்ள AA ரோடு கதவு எண் 26ல் இயங்கி வரும் தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், அக்கட்டிடத்தை அளவீடு செய்யாமல், சொத்துவரி வசூல் செய்யப்படுவதாகவும், இது குறித்து புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் அலுவலர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் ஆவணங்கள் கோரியும் அளிக்கவில்லையென்றும், எனவே அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்டுள்ள தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் (மத்தியம்) அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 58ல் உள்ள தேவகி ஸ்கேன் மற்றும் மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு சென்னை நகர ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம் தொழில் நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் மதுரை மாநகராட்சி வார்டு V பிளாக் எண் 79 நகரளவு எண்கள் 17,18,19,20,21/1, 21/2 மற்றும் 86ல் 3275.50 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் கட்டுவதற்கு 12.09.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி மருத்துவமனை அருகில் செல்லும் அவனியாபுரம் கால்வாயின் குறுக்கே கடந்து செல்வதற்கு மூன்று பாலங்கள் கட்டுவதற்கு பொதுப்பணித்துறை அனுமதி வழங்கியுள்ளது என்றும் , வார்டு 56ல் க.எண்.13, புது ஜெயில் ரோடு கதவு எண்.14, 25A. 25B மற்றும் 26–ல் உள்ள கட்டிடத்திற்கு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும், வார்டு 58ல் க.எண்.3/1 டெக்னிக்கல் ஸ்கூல் மேற்கு 13வது தெரு மற்றும் கதவு எண்.8–ல் உள்ள முகவரிக்கு அளவீடுகளின்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்றும், அங்கு பணிபுரியும் செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகமொத்தம் 50 பணியாளர்களுக்கு தொழில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் (மத்தியம்) உதவி ஆணையர்

தன்னுடைய அறிக்கையிலும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் கண்காணிப்பாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்ட தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு 2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அம்மருத்துவமனை வரைப்படத்தின் அளவீடுபடி கட்டப்பட்டுள்ளதா என்றும் இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட பின்னரும் கள ஆய்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்காமல், பொதுவாக நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்து இருப்பது அப்பட்டமான மற்றும் திசைதிருப்பும் விதமாகவும், கடமை தவறிய செயலை மூடிமறைக்கும் விதமாக உள்ளது என்று இம்முறைமன்றம் தன்னுடைய கடுமையான அதிருப்தியை பதிவு செய்கிறது. மதுரை மாநகராட்சின் மண்டலம் 3ன் அலுவலர்கள், உதவி ஆணையர் உட்பட தன்னுடைய கடமையை சரிவர செய்வதில்லை என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. விதி மீறி கட்டப்படும் கட்டிட உரிமையாளர்களுக்கு சாதகமாகவும், அவர்களுடன் கைகோர்த்து செயல்படுவதாகவும் இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி ஆணையரின் 26.06.2023 நாளிட்ட அறிக்கை மீது மேற்குறிப்பிட்ட மருத்துவமனை வரைப்படத்தின்படி கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து இம்முறைமன்றத்தின் 16.11.2023 நாளிட்ட கடிதத்தில் விளக்கம் கோரியும், 18.12.2023 நாளன்று நடைபெற்ற விசாரணை வரை எவ்வித பதிலும் அளிக்காதது மிகவும் கண்டிக்கத்தக்கது மட்டுமல்லாமல் இம்முறைமன்றத்தை மதிக்காத செயலாக கருதப்படுகிறது.

மேலும், இம்மாதிரியான அனுமதியின்றி கட்டிடம் மற்றும் கூடுதலாக கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ல் அமலாக்க நடவடிக்கை விதிகள் மற்றும் அறிவிப்பு படிவங்களை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில் மற்றவற்றிக்கிடையில்(among others)

" The Government issue the following guidelines to the Tamil Nadu Town and Country Planning (Removal of Unauthorised Development) Rules 2022 to streamline the enforcement action on unauthorized developments under section 56 and 57 of Tamil Nadu Town and Country Planning Act. 1971:-

**<u>Procedures/Guidelines to be followed:</u>**

**<u>1. Is there a need to call for records from the individual?</u>**

(1) Hon'ble High Court of Madras in its order dated 02.11.2022 in W.P.No.28929 of 2022 and W.M.P.No.28223 of 2022 filed by Thiru A.P. Ravi has observed as below:

> *"in several cases notices are being issued requiring the alleged violators to produce the sanctioned plan. It is quite surprising that the Enforcement Authority, which is the plan sanctioning Authority also, seeks copy of the sanctioned plan from the violator concerned. We do not find any legal provision under the Town and Country Planning Act supporting such a notice. It is also found that time is granted for production of*

> *sanctioned plan and thereafter a notice is issued requiring the violator to bring the development in conformity with the sanctioned plan and on failure to bring it into conformity, lock and seal notice is issued. This procedure is not contemplated under the Town and Country Planning Act."*

(ii) Since the issue of notice calling approved plan is not contemplated under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 as observed by the Hon'ble High Court, the authority concerned should confirm from its database on whether any approval has been issued for building in the site. If the same is confirmed then the enforcing authority shall retrieve the copy of approved plan from its records and the authorized official shall carry the same for site inspection.

> (iii) In cases where the database does not indicate any approval granted or copy of approved plan is not available with the enforcing authority, the principles of natural justice require an opportunity to be given to the building owner to produce the records including approved plan, if any available with them. In such cases, the notice in Form I shall be issued by giving atleast 3 days time to produce the documents.
>
> After issuance of notice in Form I calling for records from the individuals and on receipt of records/non-receipt of the records within stipulated time, inspection should be made by the authorized officer for which notice of inspection in Form II should be issued.
>
> Xxxxxxxxx

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையில்:-

"மேற்கானும் அரசாணையில் (அரசாணை எண் (நிலை) எண் 195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 05.11.2022)வெளியிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றியும் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வுகளுக்கட்பட்டு அனுமதியற்ற அல்லது அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டுமானங்கள் மற்றும் அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அனைத்து ஆணையாளர்களுக்கும், நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

இந்நேர்வில் மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கை ஆகியவை பின்பற்றப்படவில்லை மட்டுமல்லாமல் இவ்வரசாணை மற்றும் சுற்றறிக்கைப்பற்றிய விழிப்புணர்வு மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் அலுவலர்களுக்கு இல்லை என்பதை இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 3ற்கு உட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கூடுதலாக கட்டப்பட்ட தேவகி ஸ்பெசாலிட்டி மருத்துவமனைக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன்படியும், அரசாணை (நிலை) எண். 7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ல் வெளியிடப்பட்ட அமலாக்க விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்காத மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையினை கவனத்தில் கொள்ளாமல் இருந்த மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன்(மத்தியம்) சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

இவ்வாணையின் நகல் முதன்மைச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9க்கு, மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி ஆணையர் உட்பட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய தொடர் நடவடிக்கை எடுக்க அனுப்பப்படுகிறது.

There is total mess in the strict and uncompromising enforcement of Tamil Nadu Town and Country Planning Act in the zone that exposes the collusion, connivance, complicity, corrupt inaction, abetment on the part of the field level functionaries of the Madurai Corporation that is a stain on the image of sound

administration. The Forum is sad to observe this state of affairs in this zone unreviewed, uncontrolled and unmonitored by the AC and the higher level of officers above. Unless severe disciplinary action is taken against the delinquents, the Corporation image will suffer irreparable damage beyond redemption. The Director of Municipal Administration is directed to issue necessary instructions to the Madurai Corporation Commissioner to play by the rule book and perform meaningfully in enforcing stern measures wherever cases of this nature are noticed or brought to attention by public complaints. The Forum expresses its deep anguish over the Corporation's role in not enforcing Town and Country Planning Rules and G.O. dated 10.01.2023 in their true spirit.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி,
த/பெ. திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் நகர்,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 625 018.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) உதவி ஆணையர்,
மண்டலம்–03 (மத்தியம்)
மதுரை மாநகராட்சி,
மதுரை.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

1) முதன்மைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
10/10